மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உரை நாளைக்குத் தொடரும். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பயன்பெறும்வகையில், புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு (Refresher Course), இன்று *(11-4-2007)* மாலை *4-00* மணிக்கு, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *12-4-2007* அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி *32*-ஐ, *12-4-2007* வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2007 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 12-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

இன்று பேரவையில் எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைமீதான விவாதம் நாளையும் தொடரும். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-4-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

61. மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிபபு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

62. மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய செயல்திறன் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

63. மானியக் கோரிக்கை எண் 42- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)